பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி 02 செவ்வாய்க்கிழமை 19.09.2023 கதிர் 312

# குருந்தூர்மலை விவகாரம் குறித்து செப். 22 நாடாளுமன்றில் ஆராய்வு

## கலாசார அமைச்சின் மேற்பார்வைக் குழு அழைப்பு

(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய விவகாரம் நாடாளுமன்றின் கலாசார அமைச்சின் மேல்பார்வைக் குழுவில் செப்டெம்பர் 22 ஆராயப் படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர்மலை ஆதி சிவன் ஆலய வளாகத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி விகாரை ஒன்றை தொல்லியல் திணைக்களம் அமைத்துள்ளது. படையினரின் உதவியுடன் இந்த நீதிமன்ற அவமதிப்பு இடம்பெற்றுள்ளது. அங்கு நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளது என்று நீதிவான் அண்மையில் தீர்ப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அங்கு பொங்கல் வழிபாடுகளில் சைவ சமயத்தவர்கள் ஈடுபடுவதற்கு சிங்கள பௌத்தர்கள் இடையூறுகளை ஏற்படுத்தினர். இதனால் ஒரு தடவை பொங்கல் வழிபாடு தடுக்கப்பட்டது. பின்னர் நீதிமன்ற ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவிற்குப் புறப்படுவதற்கு முன்னதாகப் பொது ஜன பெரமுன ஆகிய மொட்டுக் கட்சியின் நிறுவுனர் எனப்படும் பஸில் ராஜபக் ஷவுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார். அண்மைக் காலமாக ரணிலுக்கும் பெர முனவுக்கும் இடையில் விரிசல் அதிகரித்து வருகையில் - இரு தரப்பினருக்கும் இடையிலான தேனிலவு முடிவுக்கு வரும் நிலையில் - இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ரணிலுக்கும் பஸிலுக்கும் இடையில் இதற்கு முன்னரும் பல தடவைகள் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. என்றாலும் முன்னைய சந்திப்புக்களுக்கும் இந்தச் சந்திப்புக்கும் இடையில் முக்கியமான வேறுபாடு ஒன்றுண்டு. முன்னைய சந்திப்புக்கள் அனைத்தும் பஸில் ராஜபக்ஷவின் ☞2

# கஜேந்திரன் எம்பியை தாக்கிய 6 பேர் கைது

## செப். 21 வரை அவர்களுக்கு விளக்க மறியல்

திலீபனின் ஊர்திப்பவனியை முன்னகர்த்திச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தாக்கப்பட்டமை தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் திருகோணமலை நீதிமன்றில் முன்னைப்பட்டதை அடுத்து செப்டெம்பர் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக் ☞2

# ரணில் - அஜித் - அனுர இணைவின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் - குமார

ரணில், சஜித், அநுர உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டின் எதிர்காலம் பற்றியே தலைவர்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள்தான் மக்களின் தலைவர்களாக இருப்பார்கள். ஜனநாயகத்தினை மையப்படுத்தியவர்களாக, நாட்டின் எதிர்கால பொருளாதாரம் சம்பந்தமாக அவர்கள் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கையை மீட்பதாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திஸா ☞2

# கஜேந்திரன் எம்.பியைக் கைதுசெய்ய வேண்டும்

## உதய கம்மன்பில வலியுறுத்து

பிரிவினைவாதத்தை மையப்படுத்தி பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் திலீபனின் உருவப்படத்துடன் ஊர்வலமாகச் செல்வதற்கு எந்தவொரு அனுமதியையும் பெறாது நீதியைக்கையிலெடுத்து பெரும் சட்டமீறலைச் செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உடன் கைது செய்யப்பட வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

எதுல்கோட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் ☞2

ஜனாதிபதித் தேர்தல் பற்றி

# ஒரு வருடம் முன் பேசுவது அறிவற்றவர்களின் செயல்

## கம்மன்பில தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கு ஒருவருடத்திற்கு முன்னதாக வேட்பாளர் அறிவிப்பும் அதுபற்றிய உரையாலும் அரசியலறிவற்றவர்களின் செயற்பாடு என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

எதுல்கோட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தல் 2019ஆம் ஆண்டு நடைபெற்றது. அதற்கு சுமார் ஒருவருடத்திற்கு முன்னதாக இருந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது, ரணில் விக்கிரமசிங்கவும், பஸில் ராஜபக்ஷவுமே பிரதான வேட்பாளர்களாக களமிறங்கப்போவதாக உரையாடல் காணப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் அவ்விதமான நிலைமைகள் காணப்பட்டிருக்கவில்லை. கோட்டாபயவும், சஜித் பிரேமதாசவுமே போட்டியிட்டார்கள்.

அதேபோன்று 2015ஆம் ☞2

திருத்தப்பட்ட

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இந்த வாரமே நாடாளுமன்றில்

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதாக பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: திருத்தப்பட்ட ☞2

# வீதி நிர்மாணிப்புப் பணிகளை மீண்டும் தொடங்கத் திட்டம்

இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நாட்டின் வீதிக் கட்டமைப்பின் நிர்மாணப் பணிகளை மீளத் தொடங்க திட்டமிட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்கும்போது நாட்டின் ☞8

# நீர்நிலைகளின் சீரமைப்புக்கான செலவுகளை மதிப்பிட உத்தரவு

நாட்டில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப் பாதைகளின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து பெறப்பட்ட தொழில்நுட்ப தகவல்களின் அடிப்படையில், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப்பணிகள் மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை, இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் ☞2

# தன் இருப்புக்காக இனவாதத்தை தோற்றுவிக்கின்றது இந்த ஆட்சி

## லஹிரு வீரசேகர சாடல்

சிங்களவர்களா, தமிழர்களா, முஸ்லிம்களா என்கின்ற பாகுபாடு இன்றி சட்டத்தை முறையாக அமுல்படுத்த முடியாத ஆட்சியே தற்போது உள்ளது. அந்த ஆட்சி தனது இருப்புக்காக இனவாத, மதவாதத்தினை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான நிலைமையால்தான் போர் உருவானது.

'யுத் போ சேஞ்ச்' அமைப்பின் தேசிய அமைப்பாளர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அந்த அமைப்பின் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் ☞2

# உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கையில்லை சர்வதேச விசாரணை கேட்க அதுவே காரணம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

உள்நாட்டு தேசிய விசாரணையில் நம்பகத்தன்மையை இழந்துவிட்டோம். அதனால்தான் நாங்கள் சர்வதேச விசாரணையை கோரவேண்டியிருக்கிறது. ஆனால் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கு தற்போது ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி அச்சமடைகிறது

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்றைய தினம் அதன் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக நாம் ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறோம். இந்த நிலைப்பாடு எடுக்கப்படுவதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியின் செயற்பாடுகள்தான் காரணமாக இருக்கின்றன.

தற்போதைய ஆட்சியில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு நாடாளு ☞2

# திலீபனின் ஊர்திப் பவனி கிளிநொச்சியை அடைந்தது



பொத்துவிலில் இருந்து புறப்பட்ட தியாகி

திலீபனின் ஊர்திப் பவனி திருகோணமலையில் தாக்குதலுக்கு உள்ளாகியபோதும், தொடர்ந்து பயணித்து நேற்றுமாலை கிளிநொச்சியை வந்தடைந்தது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரையான ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கோரிக்கையின் பேரிலேயே இடம்பெற்றது. ஆனால் பஸில் ராஜபக் ஷவைச் சந்திப்புக்கு வருமாறு ரணில் அழைத்திருந்தது இதுவே முதல் தடவை.

இதற்கு முன்னர் நடந்த சந்திப்புக்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசப்பட்டிருக்கிறது. அடுத்தவருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் இரண்டையும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார். ஆனால், எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்காமலேயே தவிர்த்துவிட்டார்.

இந்தத் தடவை அது பற்றிய பேச்சுக்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால், உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மெலிந்து வருவது பற்றியே ரணில் இந்தச் சந்திப்பில் அதிகம் அக்கறை காட்டினார். நாடாளுமன்றத்தில் சாதாரணமாகவே 120 உறுப்பினர்களின் ஆதரவு ஆளும் தரப்புக்கு இருக்கின்றது. இருந்தாலும் அதிகபட்சம் 113 உறுப்பினர்களின் ஆதரவே சட்டங்களை இயற்றும்போது ஆளும் தரப்புக்குக் கிடைக்கின்றது. அந்தத் தொகை அண்மையில் இன்னும் வீழ்ச்சியடைந்திருந்தது.

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் கட்சி கொண்டு வந்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதான வாக்கெடுப்பின்போது 113 வாக்குகள்தான் ஆளும்தரப்புக்குக் ஆதரவாகக் கிடைத்தன. அதுவே வருமானவரித் திருத்தச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பில் 103 உறுப்பினர்களின் ஆதரவுதான் ஆளும்தரப்புக்குக்கிடைத்தது. ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இடையே ஏற்பட்டுள்ள மனமாற்றத்தையே இது குறிப்பதாக ரணில் கருதுகின்றார். அதனாலேயே பஸிலை அழைத்து இந்தப் பிரச்சினை குறித்துப் பேசினார்.

தமது கட்சியின் சார்பில் யார் யாருக்கெல்லாம் அமைச்சுப் பதவி தரப்படவேண்டும் என்கிற பட்டியல் ஒன்றை பஸில் ராஜபக் ஷ ரணிலுக்கு அனுப்பி வைத்திருந்தார். ஆனால், ரணில் அவர்களுக்கு பதவி வழங்கவில்லை. இழுத்தடித்து வருகின்றார். அதற்கான ஓர் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாகவே நாடாளுமன்றத்தில் பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உற்ப்பினர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். முன்னதாக கடந்த வாரம் பிரதமர் டினேஸ் குணவர்த்தனவைச் சந்தித்த மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக எடுத்துக்கூறியிருந்தனர். ஆளும் தரப்பில் உள்ள 5 அமைச்சர்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்களைப் புறந்தள்ளிநடந்துகொள்வதை உடனடியாக நிறுத்தாவிட்டால், அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் இந்த அமைச்சர்களின் துறைசார் ஒதுக்கீடுகளை எதிர்ப்போம் என்று அவர்கள் பிரதமரிடமே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் எதிரொலியாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவரான இராஜாங்க மைச்சர் பிரேமலால் ஜெயசேகர கடுமையான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அமைச்சர் தனக்குக் கடமைகள் எதனையும் ஒதுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார். செய்தியாளர்களைச் சந்தித்து, இந்தப் பிரச்சினைக்கு இன்னும் இரு வாரங்களில் தீர்வு கிட்டவில்லை என்றால், கடினமான முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில்தான் வெளிநாடு செல்வதற்கு முன்பாக பஸிலை அவசரமாக அழைத்துப் பேசினார் ரணில். இந்தச் சந்திப்பில் அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அதற்கு மேலும் 13 அமைச்சர் பதவிகளை வழங்கத் தான் தயார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ஆனால் யார் யாருக்கெல்லாம் அந்தப் பதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவிக்கவில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## குருந்தூர்மலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவின் மூலம் மீண்டும் அது இடம்பெற்றது.

இதற்கிடையில் இந்த விவகாரத்தில் தலையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, முல்லைத்தீவு நீதிபதியைப் பற்றி தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். இது சட்டத்தரணிகளின் கடும் கண்டனத்துக்கு உள்ளானது.

சர்ச்சைக்குரிய இந்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோருடன் மாகாண பிரதம செயலாளரையும் கலாசார அமைச்சின் நாடாளுமன்ற மேற்பார்வைக்குழு (ஓவர்சைற் கொமிற்றி) முன்பாகச் சமூகமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. செப்டெம்பர் 22 இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

## கஜேந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினர் பிரிவினை வாதத்தினை மையப்படுத்தியவர்கள். அந்த அமைப்பினரின் நோக்கங்களுக்காக உயிர் தியாகம் செய்த திலீபனை நினைவு கூரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கிழக்குமாகாணத்தில் இருந்து வடக்குமாகாணத்துக்கு ஊர்தி பவனியில் செல்லும் போது சிங்களவர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

திலீபன் என்பவர் இந்த நாட்டை பிளவுப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட விடுதலைபுலிகள் அமைப்பின் உறுப்பினர் என்பதை இந்த இடத்தில் மீண்டும் நினைவு படுத்துகின்றேன். அவர் விடுதலை புலிகளின் நோக்கத்துக்காகவே தனது உயிரை திலீபன் தியாகம் செய்தார். விடுதலை புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டு உள் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பை பிரதிபலிக்கும் வகையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்திலான கொடிகளுடன், வாகனத்தில் திலீபனின் உருவப்படத்தை பெரிதாக வைத்துக் கொண்டு கிழக்குமாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணம் நோக்கி நூறு கிலோமீற்றருக்கும் அதிகமான வாகன பவனியில் செல்வதற்கு யார் அனுமதி வழங்கியது?

தடை செய்யப்பட்ட விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினரான திலீபனின் உருவபடத்தை சுமந்து பொது இடத்தில் பகிரங்கமாக செல்வதற்கு அரச அதிகாரி அனுமதி வழங்கியிருந்தால் அவர் அரசமைப்பின் 157 (அ) பிரிவை முழுமையாக மீறி பிரிவினைவாதத்துக்கு அனுசரனை வழங்கியுள்ளதாக கருத வேண்டும்.

நாட்டின் அரசியலமைப்பை மீறும் வகையில் அரசஅதிகாரி செயற்படுவதற்கு அரசியல்வாதியொருவர் அழுத்தம் பிரயோகித்திருந்தால் உடனடியாக அந்த அரசியல்வாதி கைதுசெய்யப்பட்டு அரசியலமைப்பின் 157(அ) பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும்.

சாதாரண சிங்கள சமூகத்தினரை இலக்காக கொண்டு விடுதலை புலிகள் அமைப்பு 300 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது. பிரிவினைவாத தாக்குதலால் ஒட்டுமொத்த சிங்கள சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்கள் தமது உறவுகளை இழந்துள்ளார்கள்.

விடுதலை புலிகள் அமைப்பு தொடர்பில் சிங்கள சமூகத்தின் மத்தியில் கோபம், வெறுப்பு காணப்படுவது இயல்பானதே. இவ்வாறான பின்னணியில் விடுதலை புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூரும் வகையில் சிங்களவர்கள் வாழும் பகுதிக்கு ஊர்திபவனி செல்வது சிங்களவர்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு சூழ்ச்சியாகும்.

2007ஆம் ஆண்டு 57ஆவது இலக்கத்தின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3ஆவது பிரிவுக்கு அமைய இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் வகையில் மக்களை ஆத்திரமூட்டும் வகையில் முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அத்துடன் அவை பாரதூரமான குற்றச்சாட்டாக கருதப்படுவதால் தான் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரசியலமைப்பின் 157 (அ) பிரிவை மீறியுள்ளார். சர்வதேச அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சமவாய சட்டத்தின் 3ஆவது பிரிவை மீறியுள்ளார். ஆகவே இவ்விரண்டு காரணிகளையும் முன்னிலைப்படுத்தி அவர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்.

அதேநேரம், பிரிவினைவாதத்தினை முன்னிலைப்படுத்திய பவனியின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் நடத்திய சாதாரண பொதுமக்களும் சட்டத்தினைக் கையிலெடுத்து தவறிழைத்துள்ளார்கள். ஆகவே அவர்களும் கைது செய்யப்பட வேண்டியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. சட்டம் அனைவருக்கும் சமமானது - என்றார்.

## நீர்நிலைகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்த அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சமர்ப்பித்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் குறித்த துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீர்ப்பாசனத்திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் மின்சார சபைக்கு சொந்தமான நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை எடுத்துச் செல்லும் அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் சுரங்கப் பாதைகளின் தொழில்நுட்பப் பாதுகாப்புக் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, நீரை எடுத்துச் செல்லும் சுரங்கப்பாதைகள் அடைப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அவற்றில் சேர்ந்துள்ள மணல் மற்றும் சேற்றை அகற்றி அவற்றை புனர்நிர்மாணம் செய்தல், அண்மைக் கால நிலநடுக்கங்களால் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் ஆண்டுதோறும் சாதாரண சூழ்நிலையில் நிகழும் பாதிப்புகள் போன்ற பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நீர்ப்பாசனத்திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்திற்கு முன்னதாக மஹிந்த ராஜபக் ஷவும், ரணில் விக்கிரமசிங்கவுமே பிரதான போட்டியாளர்களாக இருந்தனர். மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கிய சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன கனவிலும் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன் என்று நினைத்திருக்க மாட்டார். ஆனால் இறுதி நேரத்தில் நிலைமைகள் மாறின.

மஹிந்த ராஜபக்ஷவுடன் மைத்திரிபால சிறிசேனவே மோதினார். ரணில் விக்கிரமசிங்க ஓரங்கட்டப்பட்டார். ஆகவே ஜனாதிபதி தேர்தலுக்கு ஒருவருடத்திற்கு முன்னதாகவே வேட்பாளரை அறிவிப்பதும் அதுபற்றி உரையாடுவதும் அரசியல் அறிவற்றவர்களின் செயற்பாடாகும். ஏனென்றால் ஜனாதிபதி தேர்தலுக்கு ஒருவருடத்திற்கு முந்திய காலம் என்பது மிகவும் அதிகமானது. அதற்குள் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படும் - என்றார்.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க உள்ளிட்ட அனைவரும் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அதன் மூலமே இந்த நாடு தனது எதிர்காலத்தினை சுபீட்சமானதாக்க முடியும். அவ்வாறு இல்லாது விட்டால் அரசியல் நலன்கள் மட்டுமே நிறைவேறும் - என்றார்.

## தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

திலீபன் எந்த இயக்கத்தினை சேர்ந்தவர் என்பதை இங்கு உள்ள பிரச்சனை அல்ல. அது வெறொரு விடயமாகும். ஆனால் திலீபனுடைய ஊர்தியும், நாடாளுமன்ற உறுப்பினரும் தாக்கப்பட்ட பொழுது அந்த இடத்தில் பொலிஸார் இருக்கின்றார்கள். இந்தத் தாக்குதலைச் செய்தவர்கள் பொதுமக்கள் என்று ஆட்சியாளர்கள் காண்பிக்கின்றார்கள். அது தவறானதாகும். அங்கு குண்டர்களே இருந்தார்கள். அவர்கள் தான் ஊர்தி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல்களை நடத்தினார்கள். குண்டர்களைக் கைது செய்வதற்கு பொலிஸ் முறைப்பாடு அளிக்கப்பட வேண்டும், அதன் பின்னர் தான் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்கின்ற நடைமுறை தேவையில்லை, குண்டர்களை உடனடியாகவே கைது செய்ய முடியும்.

சிங்களவர்களா, தமிழர்களா, முஸ்லிம்களா என்கின்ற பாகுபாடு இன்றி சட்டத்தை முறையாக அமுல்படுத்த முடியாத ஆட்சியே தற்போது உள்ளது. அந்த ஆட்சி தமது இருப்புக்காக இனவாத, மதவாதத்தினை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான நிலைமையால்தான் போர் உருவானது.

தற்போது போர் நிறைவுக்கு வந்ததும், நல்லிணக்கம் பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால் அதற்கான எந்த விதமான நடவடிக்கைளும் செயற்பாட்டில் இல்லை.

சிங்களம், சிங்கள தேசிய வாதம், பௌத்த வாதம் என்று கூறி அடுத்த தேர்தல் வெற்றிக்கான செயற்பாடுகளை இப்போதே ஆரம்பித்து விட்டார்கள். இதனை பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார்.

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் 120 பேரின் ஆதரவு இருக்கின்றது. ஆனால் அவர்கள் ராஜபக் ஷவினுடைய விசுவாசிகள். ஆகவே அவர்கள் செல்கின்ற பாதையில்தான் ரணில் விக்கிரமசிங்கவும் பயணிக்கிறார்.

எனவே உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில் அவரால் நீதியான நியாயமான விசாரணை முன்னெடுக்கப்படுமென்று கூறமுடியாது. எம்மைப் பொறுத்தவரையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுத்த முக்கியமான குற்றப்புலனாய்வு அதிகாரிகள் அந்த பணியிலிருந்து இடமாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமின்றி அவர்கள் சிலர் பணியில் இருந்து நிறுத்தப்பட்டும் இருக்கிறார்கள். ஆகவே விசாரணைகள் திட்டமிட்டுமுடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் உண்மைகளைக்கண்டறிவது மிகவும் கடினமான விடயமாகும். எனது அரசியல் கொள்கைகளுக்கு அமைவாக உள்நாட்டு தேசிய விசாரணை ஒன்றே முன்னெடுக்கப்படவேண்டும் என்பது நிலைப்பாடாக இருந்தாலும் தற்போதைய நிலையில் உள்நாட்டு தேசிய விசாரணையில் நம்பகத்தன்மையை இழந்துவிட்டோம்.

அதனால்தான் நாங்கள் சர்வதேச விசாரணையை கோர வேண்டியிருக்கிறது. ஆனால் சர்வதேசவிசாரணையைமுன்னெடுப்பதற்குதற்போதுஜனாதிபதி தலைமலைமையிலான ஆட்சி அச்சமடைகிறது அதற்கான காரணம் என்ன என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார்.

## தாக்கிய 6 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன், திலீபனை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தங்களது உறுப்பினராக அடையாளப்படுத்தியுள்ள நிலையில் அந்த இயக்கம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திலீபன் என்பவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவராக இருந்து பின்னர் இலங்கையில் இந்தியப் படைகள் தங்கியிருந்தபோது அவற்றை வெளியேறக்கோரி உண்ணாவிரதமிருந்து உயிரிழந்த நபராவார். எனினும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமானது அவரை தமது உறுப்பினராக பிரகடனப்படுத்தி அவருடைய நினைவு தினத்தினை முன்னெடுத்து வந்திருந்தனர்.

இலங்கையில் காணப்படுகின்ற பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைவாக, திலீபன் போன்ற நபர்களை நினைவு கூரமுடியாது.

உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எந்தவொரு உறுப்பினரையும் நினைவுகூருவது தடைசெய்யப்பட்ட விடயமாகும்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக திருகோணமலை சீனக் குடா பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

## திலீபனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



தியாக தீபம் திலீபனின் இந்த நினைவு ஊர்திப் பயணம் செப்டெம்பர் 15 ஆரம்பமாகி மூன்றாம் நாளில் கிளிநொச்சியை அடைந்தது. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அங்கு அஞ்சலி செலுத்தினர். (113)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சம்பந்தமாக தேவையற்ற அச்சங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குறித்த சட்டமூலம் பற்றி நீதியமைச்சர் எமக்கு தெளிவுபடுத்தியுள்ளார். அதனடிப்படையில் அதனை இந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

அச்சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று

தொடர்ச்சி 8ம் பக்கம்...

# இலங்கை அரசின் இனப்படுகொலையிலிருந்து தமிழரை பாதுகாப்பதற்கு சர்வதேசம் உடன் தலையிடல் வேண்டும்

## ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் குழு வலியுறுத்து

தியாகி திலீபனின் நினைவு ஊர்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை எந்தவித தயக்கமும் இன்றி கடுமையாக கண்டிப்பதாக ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தமிழர் தாயகப்பகுதிகளை பாதித்துள்ள சம்பவங்களில் ஒன்றாகும் எனவும் தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் குழு தெரிவித்துள்ளது.

மருத்துவ மாணவரான திலீபன், தனது ஆழமான உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் சாகும்வரை உண்ணாவிரதத்தின் மூலம் தியாகத்தில் உன்னதமான தியாகத்தை செய்தார். இது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான அவரது அர்ப்பணிப்பின் சக்தி வாய்ந்த அடையாளமாகும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் அமெரிக்கர்களாகிய நாங்கள் எங்களின் சக தமிழர்களுடன் உறுதியாக நிற்கின்றோம். சுதந்திரம் மற்றும் நீதிக்கான அவர்களின் கோரிக்கைகளை - வேண்டுகோள்களை - ஆதரிக்கின்றோம் எனவும் அமெரிக்க தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நாவும் சர்வதேச சமூகமும் உடனடியாகத் தலையிட்டு இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலைகளில் தமிழ்மக்களைப் பாதுகாக்கவேண்டும், எமது தாயகத்தில் உள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான ஒருமுக்கிய நடவடிக்கையாக வடக்கு கிழக்கு சுயராஜ்யமற்ற பிரதேசமாக அறிவிக்கப்படவேண்டும் எனவும் தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். இந்தத் தாக்குதல் 1983 ஆம் ஆண்டு இரத்தக்களறி கறுப்பு ஜூலையை நினைவுபடுத்தும் ஒரு சம்பவமாகும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (05)

# திருமலை தாக்குதல் சீமானும் கண்டனம்



தியாக தீபம் அண்ணன் திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல் - ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த, தமிழ்நாடு அரசு இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

ஈழத்தாயகத்தில் திருகோணமலை கப்பல்துறையில் தியாக தீபம் அண்ணன் திலீபன் அவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்டிருந்த திலீபன் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திமீது சிங்களக்காடையர்கள் தாக்குதல் நடத்தி அதனை சிதைத்ததோடு, தமிழ்த்தேசியமக்கள்முண்ணனியின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் அவரது கட்சி செயற்பாட்டாளர்கள் 50 இற்கும் மேற்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையான கண்டனத்திற்குரியது. இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார். நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

ஈழவிடுதலையில் ஆயுதப் போராட்டத்தின் அறத்தையும், அவசியத்தையும் தனது அஹிம்சை போராட்டத்தின் மூலம் உலகிற்கு உணர்த்திய விடுதலைப்பேரொளி திலீபனின் ஈகத்தைக்கூட நினைவு கூரக்கூடாது என்று விடுதலைப்போர் மௌனிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகும் சிங்களக் காடையர்களை ஏவி இலங்கை அரசு திலீபன் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துமாயின், தமிழர்கள் மீதான சிங்கள இனவெறி மனப்பான்மை என்றைக்கும் மாறாது என்பதற்கு இந்தக் கொடும் நிகழ்வு மற்றுமொரு சான்றாகும்.

இலங்கை இனவாத அரசின் இராணுவ முகாம் எதிரில் சிங்கள பொலிஸார் முன்னிலையிலேயே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல், சனநாயக முறையில் தமிழர்கள் ஒருபோதும் உரிமையைப் பெற்றுவிட முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அற்ப அரசப்புதிருத்தங்கள் மூலம் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் பெற்று வாழ்ந்திட முடியும் என்ற வரலாற்று பொய்யை பன்னாட்டு அரங்கில் மீண்டும் மீண்டும் முன் வைக்கும் இந்திய ஒன்றிய அரசு இப்போதாவது இனவாத இலங்கை அரசைக் கண்டிக்க வாய் திறக்குமா?

தமிழ் மக்களின் சனநாயக பிரதிகளின் மீதான வன்முறைத் தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறும் நிலையில் இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு அதனை அமைதியாக வேடிக்கைப் பார்ப்பது ஏன்? இதுதான் இந்தியா தமிழர்களுக்கான உரிமையைப் பெற்றுத்தரும் முறையா? தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு வழக்கம்போல் கடந்து செல்லாமல் உடனடியாக, ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது. (05)

# தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே பொலிஸாரினது நடவடிக்கைகள் உள்ளன

## கஜேந்திரன் மீதான தாக்குதலுக்கு சந்திரகுமார் கண்டனம்



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில ரௌடிகளால் தாக்கப்படும் போது பொலிஸார் நடந்துகொண்ட விதம் மிகவும் கண்டனத்திற்குரியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

செல்வராசா கஜேந்திரன் மக் களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர். அவரை தெருவில் ஒன்று கூடிய சில ரௌடிகள் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குகின்றமை என்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல். தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளைத் தடுத்து சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தமை என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாகக் காட்டி நிற்கிறது.

இதுதான் இந்த நாட்டின் நிலைமை, தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம் எனத் தெரிவித்த அவர், நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ளவிடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி, மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்த தாக்குதல் சம்வத்தைக் கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். - என்றுள்ளது. (05)

# கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதல் ஹரி ஆனந்த சங்கரி எம்.பி. கண்டனம்



நாடாளுமன்றஉறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கு கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஆனந்த சங்கரி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

பொலிஸார் தடுக்க முயலாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நான் கண்டிக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையில் அச்சமின்றிசட்டத்தைமீறுபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பதை வெளிப்படு;த்துகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# சட்டவிரோதமாக வெளிநாட்டு தொழிலுக்கு செல்வோரினது எண்ணிக்கை அதிகரிப்பு

சட்ட விரோதமான முறையில் தொழிலுக்காகவெளிநாடுசெல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2500 வரையிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டவை வருமாறு -

சட்ட விரோதமான முறையில் தொழிலுக்காகவெளிநாடுசெல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. அதற்கமைவாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2500 வரையிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த வருடத்தில் குறித்த எண்ணிக்கை 1900ஆகக் காணப்பட்டது.

மேலும், அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பியமை தொடர்பிலும் தனிநபராக அல்லது குழுவாக வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பிலும்ஆண்டின்இதுவரையான காலப்பகுதியில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் தனிநபர்களாக, குழுக்களாக செயற்பட்ட 90 பேரும், அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்புவதற்கு முற்பட்ட 9 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரத்தை பெற்றுத் தவறாகசெயற்பட்டநிறுவனமொன்றின் உரிமையாளரும் அதில் அடங்குகிறார். இந்நிலையில் சட்ட விரோதமாக வெளிநாடு செல்வதைத் தவிர்க்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (05)

# மக்களுக்குச் செய்யும் சேவைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமாம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அறிவுரை



சுற்றுச்சூழல் அழகாக உள்ளது என்பதற்காக பொலிஸ் நிலையம் அழகு என்று கூற முடியாது. எமது பொலிஸ் சேவைகளின் ஊடாகவே அது அழகாகிறது. எனவே நாம் மக்களுக்கு செய்யும் சேவைகளை சிறப்பாக செய்ய வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட பொல்பித்திகம பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாம் பொலிஸாரிடமிருந்து நேர்மையான மற்றும் தரமான சேவையை எதிர்பார்க்கிறோம். பொலிஸார்மீதுகொண்டிருந்தஅதிருப்தி நிலை தற்போது இல்லாமல் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

நான் அமைச்சராகப் பதவியேற்ற பிறகு பொலிஸாருக்கு செய்யக்கூடிய அனைத்தையும் செய்துள்ளேன். நாடளாவிய ரீதியில் 500 ஜீப்கள் பொலிஸ் நிலையங்களுக்குவழங்கப்பட்டன. மேலும் செய்ய ஆவலுடன் காத்திருக்கிறேன். இதற்குப் பதிலாக நேர்மையான சேவையை பொலிஸ் அதிகாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

மேலும் சுற்றுச்சூழல் அழகாக உள்ளது என்பதற்காக பொலிஸ் நிலையம் அழகு என்று கூறமுடியாது. எமது பொலிஸ் சேவைகளின் ஊடாகவே அது அழகாகிறது. நாடாளுமன்றத்தில் கூட பொலிஸாரை திட்டுகிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இருப்பினும் அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் வந்தால் பொலிஸ் நிலையங்களுக்கே வருகின்றனர்.

நாம் மக்களுக்கு செய்யும் சேவைகளை சிறப்பாக செய்ய வேண்டும். மேலும் இந்தப் பிரதேசத்தில் உள்ள சாராயம் போதைப்பொருள் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு இடம்கொடுக்ககூடாது. அப்போதே இந்த பிரதேசம் அழகாகும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## லஞ்ச ஊழல் தடுப்பு நடவடிக்கையின் நிலை

கடந்த ஆண்டு (2022) லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான 89 வழக்குகள் லஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பல்வேறு காரணங்களுக்காக இவற்றில் 45 வழக்குகள் வாபஸ்பெறப்பட்டுள்ளதாகவும்தேசியகணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தணிக்கை முடிவு நாளான டிசெம்பர் 19, 2022 வரை, 20 வழக்குகள் மட்டுமே நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டுள்ளன என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021ஆம்ஆண்டில், லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழு 69 லஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை முடித்தது, அதில் 40 வழக்குகள், அதாவது 58 சதவீத வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன என்றும் அறிக்கை கூறுகின்றது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 18 வழக்குகளில் இருந்துவிடுவிக்கப்பட்டனர். 11வழக்குகளில்குற்றம் சாட்டப்பட்டவர்கள் மட்டுமே குற்றவாளிகள் என தணிக்கை அறிக்கை கூறுகிறது. அவ்வாறு மீளப் பெறப்பட்ட வழக்குகளில் 20 வழக்குகள் 2022இல் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக் குழுவின் தலைமை கணக்கு அதிகாரி இது தொடர்பாக விளக்கம் அளிக்கும்போது தெரிவித்துள்ளார்.

9 பேர் மீது வழக்குப்பதிவு செய்வதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியஇரண்டுவழக்குகளிலும்சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளதால், வழக்கு தொடர்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த ஆண்டு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் நிலமை என்ன என்பதை இந்த அறிக்கை புடம்போட்டு வைக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டதைவிட கைவிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையே அதிகம் இருப்பதை இது காட்டுகின்றது. அதற்கும் மேலாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில்கூட பெரியளவில் எவரும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டதாகவும் இல்லை.

நாட்டில் லஞ்ச ஊழல், மேல் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை புரையோடிப் போயிருந்தும் குற்றமிழைத்தவர்கள் தண்டனை பெறுவது மிக மிகக் குறைவாக இருப்பதும் அப்படிப்பட்டவர்கள் சட்டத்துறையின் அச்சுறுத்தலுக்கு உள்ளாவது குறைவாக இருக்கையில் அதனைக் கட்டுப்படுத்துவது என்பது இலகுவானது அல்ல.

அதனாலேயே புதிய லஞ்ச, ஊழல் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்னரும்கூட அது சமூகத்தில் எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்தச் சட்டங்களின் தீவிரமான நடைமுறைப்படுத்தலே இந்த விடயத்தில் கொஞ்சமாவது பயத்தை ஏற்படுத்தி லஞ்ச ஊழலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடும். அதற்கு அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு அவசியமாகின்றது.

## கற்பகதரு என்னும் அற்புதம்
# ஓலைகளின் உன்னதம்

அங்கம் – 14



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனை ஓலையுடன் சமமாக நிற்கமுடியாது என்பதைக் தெரிந்ததும் தென்னை ஓலை ஒதுங்கிக் கொண்டு விட்டது. பனை ஓலையின் பயன்பாடு பல நிலையில் இருப்பதுதான் முக்கியம் என்பதைக் கருத்திருத்த வேண்டும். மழைக்குக் குடையாகப் பனை ஓலை வந்தது. அத்துடன் நின்றுவிடாமல் வெயிலினின்றும் காத்து விட தொப்பியாய் வடிவம் எடுத்து வந்திருக்கிறது. தொப்பி என்றவுடன் – இன்று பலவித வடிவங்களில், பல விதவண்ணங்களில்தொப்பிகள் வந்திருப்பதைக் காணுகிறோம். அந்தத் தொப்பிகளை வாங்கிப் பயன் படுத்துவதையும் காணுகிறோம் இப்படி வருகின்ற தொப்பிகளுக்கு மத்தியில் – எங்கள் பனை ஓலையி னால் ஆகிய தொப்பிகளும் வந்திருக்கின்றன என்பதும் நோக்கத்தக்கது.




பனை ஓலையினாலாகிய தொப்பிகள் பல வடிவங்களில் விற்பனைக்கு வந்திருக்கிறது. குழந்தைகள் போடுவதற்கான தொப்பிகள், கிரிக்கட் தொப்பிகள், வட்டத் தொப்பிகள், என்று வகை வகையாய் தொப் பிகள் வருகின்றன. இந்தியாவில் இராமநாதபுரத்தில் பனை ஓலைத் தொப்பிகள் முக்கிய தொழிலாக வும், வருமானத்தை வழங்கும் தொழிலாகவும் நடை பெறுகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயா கும். இப்பகுதியில் இந்தந் தொழிலானது ஏறத்தாள நாற்பது வருடங்களாக இடம் பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



பனை ஓலைத் தொப்பிகள் செய்யும் வேலையில் பெரும்பாலும் பெண்களே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது நோக்கத்தக்கது. இங்கு செய் – யப்படுகின்ற தொப்பிகளைப் பலரும் விரும்புவதால் – இந்தியாவின் பல மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. குறிப்பாக ஹைதராபாத், டெல்லி மாநிலங்கள் விரும்பி வாங் குகின்றன. வெளிநாட்டிலிருந்து





சுற்றுலா வருகின்றவர்கள் மிகவும் விருப்பதுடன் இந்தந் தொப்பிகளை வாங்குகின் றார்கள். இராமேஸ்வரம் பகுதியில் இத்தொப்பிகளுக்கு நல்ல விற்பனை வாய்ப்புகள் இருப்பதாக – தொப்பி உற்பத்தியில் ஈடு படுகின்றவர்கள் சொல்லுகிறார்கள். காரணம் ; அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருவதேயா கும்.

சாதாரண தொப்பிகளுக்கும், பனை ஓலைத் தொப்பிகளுக்கும்வித்தியாசம் இருக்கிறது. சாதாரண தொப் பிகள் அழகாய் பல வண்ணங்களில், வடிவங்களில் இருந்தாலும் அணிந்து கொள்ளும் பொழுது – தலையில் வியர்வை வந்துவிடும். பனை ஓலைத் தொப்பிகளை அணியும் பொழுது காற்றோட்டமாக இருக்கும். வெய் யிலும் தாக்காது. வியர்வையையும் ஏற்படுத்தாது. பனை ஓலையின் பக்குவம் அப்படியானது.

யாழ்ப்பாணத்தின் நகரத்தில் இருக்கும் பிரதான சந்தையில் – பனை ஓலையினாலாகிய பொருட்களை விற்பனை செய்வதற்கென்றே ஒரு பகுதி அமைந்திருப்பதைக் காணலாம். அங்கு பனை ஓலைத் தொப்பிகள் நிறையவே இருக்கும். குருத்தோலையினைப் பயன்படுத்தி சாயங்கள் ஊட்டப்பட்ட பின்னலுடன் பல அளவுகளில் பனை ஓலைத் தொப்பிகள் இருப்பதைக்காணலாம். தென்னிலங்கையிலிருந்து வருகின்ற மக் கள் மிகவும் விருப்பத்துடன் வாங்கிச் செல்லும் பொருட்களுள் – பனை ஓலைத் தொப்பிகளும் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொப்பியைத் தந்த பனை ஓலை ஓய்ந்துவிடாமல் பல வற்றைத் தந்தபடியே இருக்கிறது. பனை ஓலை என் று சாதாரணமாக எண்ணி விடாமால் – எம்,எ பட்டம் பெற்ற ஒரு இளைஞர் பனை ஓலையினைத் தேர்ந் தெடு த்து மிகவும் துணிச்சலாக ஒரு புதுமுயற்சியில் ஈடுபட்டு வருகிறார் என்றால் நம்புவீர்களா?

திருப்பூர்மாவட்டத்தைச்சேர்ந்த இளைஞர் படித்துப் பட்டம் பெற்று விட்டு வங்கியொன்றில் வேலை பார்த் திருக்கிறார். இயற்கை வழியில் வேளாண்மை பற்றிய நம்மாழ்வாரின் கருத்துக்கள் இவர் உள்ளத்தில் பதிந் தது. நம்வாழ்வாரின் பல காணொளிக் காட்சிகளையும் பார்த்தார். விவசாயத்தை நாடாதவர் மனம் விவசாயத்தின் பக்கம் திரும்பியது. நல்ல சம்பளத்தில் பார்த்த வங்கி வேலையை விட்டு விட்டார். தன்னுடைய நண் பனுக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் இயற்கை விவசாயம் செய்யும் முயற்சியை மேற்கொண்டார். இவரின் முயற்சிக்குநிலம்வாய்த்த இடம் இராமநாதபுரமாகும். விவ சாய முயற்சியில் ஈடுபடும் வேளை – அங்கு நிறைந்து காணப்பட்டகற்பகதருவாம்பனைக் கூட் டங்கள் அவரின் கருத்தில் பதிந்துவிட்டன.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalāikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம் ஒலைகளின் உன்னதம்

நான்காம்பக்கத் தொடர்ச்சி.....

பதிந் துவிட்ட நிலையில் அவரின் மனதில் ஒரு புது எண்ணம் உருவானது.பனை ஓலையினைப்பயன்படுத்தி திருமண அழைப்பிதழ்கள், விசிட்டிங் கார்டுகள், திருமணத்துக்கான மாலைகள்,என்று புதிய முறையில்



செய்தார்.சவர்க்காரம்வைப்பதற்கான கவர்கள், பூஞ்செடிகளை வைத்து வளர்ப்பதற்கானஅளவானபெட்டிகள் ,என்று இவரின்புதியசிந்தனையால் பனை ஓலை மேலும் ஒரு வித பரிமாணத்தைப் பெற்று மக்கள் மத்தியில்செல்வாக்கினைச்செலுத்தி நின்றது.சாமிநாதன் என்னும் இந்த இளைஞர் - தான் உருவாக்கிய பனை ஓலையினாலான திருமண அழைப்பிதழை தன்னுடைய திருமணத்திலேயேஅரங்கேற்றினார் என் பதுதான் முக்கியமாகும். செய்யுங்கள் என்று சொல்லி நிற்காமல் அதனைத் தானே செய்து நல்ல எடுத்துக் காட்டாய் விளங்கிய சுவாமிநாதனைஅவரின்மனைவியும் பெருமையுடன்வரவேற்று நின்றார். அவரின் மனைவி ஒரு கல்லூரிப் பேராசிரியாயும் இருந்தார். திருமணத்த்தின் பின் - பேராசிரியர் வேலையினையே விட்டு விட்டு , கணவனுடன் இணைந்து பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தியில் உழைத்து வருகிறார்.பனை ஓலையால் செய்யப்படும் திருமண அழைப்பிதழ்களுக்கு நல்ல வரவேற்புகிடைத்திருக்கிறதாம்.அத்துடன் நல்ல வருமானமும் வருகிறதாம் என்று படித்துப் பட்டம் பெற்ற தம்பதிகள் சொல்லி மகிழ்கிறார்கள் . பட் டம் பெற்றவர்களையும் கவர்ந்து தன்வசம் ஆக்கிய பனை ஓலையைப் பாராட்டாமல் இருந்திட முடியாதுதானே !

திருமண அழைப்பிதழை பனை ஓலையில் சாமிநாதன் உருவாக்கினார். தூத்துக்குடியைச் சேர்ந்த பால்பா ண்டி என்பவர் இன்னு மொரு வகையில் சிந்திந்து அதன் வழியில் பயணப்பட்டு - பனை ஓலைகளைக் கொண்டு மனித உருவங்களை செய்து அனைவரையும் அசரவைத்து வருகிறார். பால்பாண்டியின் பரம்ப ரையே பனையோடுதான் வாழ்ந்து வருகிறது.தன்னுடைய பேரன் பேர்த்திகளுக்காக பொம்மைகளை ஆரம் பத்தில் செய்யத் தொடங்கினார். பின்னர் ஆர்வம் மேலிட்டதால் விமானம் செய்தார். வண்டி செய்தார்.தொடர்ந்து ஒட்டகம், யானை, குதிரை , செருப்பு, என்று செய்து கொண்டே போனார். செய்யச்செய்ய ஆர்வமும் ஆசையும் மேலிட - திருச்செந்தூர் கோயில் கோபரத்தையே மூன்றடி உயரத்தில்ஆக்கினார். திருச்செந்தூர் கோவிலைக் காணவைத்தவர் அதுடன் அமையாது கிறித்தவ தேவாலாய கோபுரத்தையும் அமைத்து ஆனந் தப்பட்டார். காதலை மனமிருத்தி யாவரும் விரும்பும் தாஜ்மகாலையும் கலை நயத்துடன் செய்தார்.உழை த்து நிற்கும் விவசாயியைக் காட்டிட ஆசை கொண்டு - கலப்பை ஏந்திய விவசாயி, உழவு விவசாயி என்று பொம்மைகளை ஆக்கி நின்றார்.பலவற்றைக் கருத்திருத்தி பொம்மைகள்செய்தவர்ஓயவில்லை. கல்வி க்கண் திறந்த காமராசர் , ஏழைகளின் தோழன் காமராசர் ! எங்களின் உள்ளம் உறையும் காமராசர்!என்றுபோற்றும்வண்ணம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக விளங்கியவர்தான் காமராசர். அவர் மேல்மிகவும்பிரியம்கொண்டிருந்தார் பால் பாண்டி. அதனால் அவரின் சிந்தனை காமராசரை பனை ஓலை கொண்டு பொம்மையாக்க எண்ணியது.அவரின் முதல் மனித உருவப் பொம்மையாக அமைந்தது காமராசர்பொம்மையேயாகும்.அதன் பின் வியத்தகு விஞ்ஞான மேதை மேதகு இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலா ம் அவர்களை பனை ஓலையினால் பொம்மையாக்கிப் பெருமிதப் பட்டார். ஜனாதிபதியினை உருவாக்கிய வருக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியை விட்டுவிட மனம் வரவில்லை. முத்தமிழ் அறிஞரின் பொம்மையினை ஏழுடி உயரத்தில் அமைத்துச் சாதனையாளராய் விளங்குகிறார் பால்பாண்டி. இரண்டு மாதங்களில் இந்தப் பொம்மையினைச்செய்துமுடித்ததாக அறிய முடிகிறது.இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின்பொம்மையினை ஆக்கும் பணியில் பால்பாண்டி இப் பொழுதுஇருக்கிறார். வருங்காலத்தில் அவரின் சிந்தனையால் பனையின் ஓலை புதுப் புது வடிவங்களைத் தாங்கி வரப்போகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.


குடை தந்தது. தொப்பி தந்தது. கூரை தந்தது.கூழ்குடிக்கப் பிளாவும் தந்தது.காற்றில்லா வேளை கைகொடுக்க விசிறியாயும் ஆகியது பனை ஓலை - மின் விசிறி இல்லாக் காலத்திலும் விசிறியாய் பயன்பட்டது.மின் விசிறி வந்த பின்பும் பனை ஓலைவிசிறிபயன்பாட்டில்இருக்கிறது என்பதும்நோக்கத்தக்கது. மின்சாரம் இருந்தும் பல வீடுகளில் ஒழுங்காக மின்சாரம் வராத நேரங்களில் அனைவரது கைகளிலும் பனை ஓலை விசிறியே வந்து நிற்கும். வெய்யில் காலங்களில் விசிறிதான் எங்களுக்குப் பெருந்துணையாய் இருந்தது.சாய்மானற் கதிரையில் பத்திரிகை வாசிக்கும் அப்பாவோ , தாத்தாவோ பெரியப்பாவோ - பத்தி ரிகையுடன் பனை ஓலையினாலாகிய விசிறியையும் கையில்வைத்திருப்பார்கள்.பாட்டிமார் வெற்றிலை இடிக்கும் உரலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு - கைகளிலே பனை ஓலை விசிறியை விசிறிக் கொண்டு இருப்பார்கள்.நாங்கள் கூட பனை ஓலை விசிறியை பங்குனி சித்திரை மாதங்களில் விட்டுவிட்டு நகரவே மாட்டோம் அல்லவா ? பனை ஓலை விசிறி பாரம் அற்றது.அது அமைந்திருக்கும் அமைப்பால் காற்று தேவையான அளவு வந்து விழும். பிடிப்பதற்கு என்று அளவான கைப்பிடி.பனை ஓலை விசிறியை விசிறு வதால் கையும் வலிக்காது. காற்றும்சுகமாகக்கிடைக்கும்.பனை ஓலைப் பாயில் படுத்தபடி பனை ஓலை விசிறியால் விசுறுவதே ஒரு ஆனந்தமாகும்.அனுபவித்தவர்களுக் குத்தான் அதன் ஆனந்தம் தெரியும்!

விசிறிக்கொண்டேபசும்பாலைப் பருகுவதும் ஒரு பேரானந்தமேயாகும்.பாலைப் பொழிந்து தருகின்ற பசுக்களின் பசியினைப் போக்கும் நிலையிலும் பனை ஓலை வந்து கைகொடுத்து நிற்கிறது என்பதையும் கருத்திருத்த வேண்டும். பச்சைப் பனை ஓலையைக் கிழித்து அவற்றைத் துண்டாக்கி பசுக்களுக்கு வைக்கும் பொழுது - அதனைத் தின்னும் பசுக்களின் பால் - நல்ல மணமும், சுவையும் கொண்டதாய் இருக்கும். பசுக் களுக்கும் பனை ஓலையின் சுவையும் நன்றாகவே பிடிக்கும். பாலைத் தரும் பசுவோடு - வண்டியிழுக்கும் மாடுகளும், வயலை உழும் மாடுகளும் பனை ஓலையினை விருப்பத்துடன் சாப்பிடுகின்றன.பனை ஓலையின் மீது கொண்ட ஆசையினால் - வேலியில் இருக்கும் பனை ஓலையினை இழுத்து அவற்றை வாயால் கடித்து இழுப்பதையும் காண முடிகிறது.

இப்படி - எல்லா வகையிலும் பயனான பின்னரும் - பனை ஓலை நின்று விடவில்லை. பயிர்களுக்கு நீர் ஊற்ற , நீரிறைக்கப் பயனாகி இருந்த பனை ஓலை தன்னுடைய கடைசிக் காலத்தில் - பயிர் செய்யும் நிலத் துக்கு உரமாகி தன்னுடைய வள்ளல் தன்மையினைக் காட்டியே நிற்கிறது.பனைஓலையின்பயன்பாடு "பயன்மிக்க பயன்பாடு ".

**கூரையானேன்**
**குடையானேன்**
**குழந்தைக்கும்**
**தடுக்கானேன்**
**வேலியானேன்**
**தாலியானேன்**
**வியர்வைக்கு**
**விசிறியானேன்**
**கால்நடைக்கு**
**உணவானேன்**
**கல்யாண அழைப்பானேன்**
**மணமக்கள்**
**மாலையானேன்**
**மங்கலமாய் பூவானேன்**
**கோபுரங்கள் ஆகினேன்**
**குழந்தைக்கும்**
**பொம்மையானேன்**
**நாட்டுத் தலைவரையும்**
**காட்டுதற்குத்**
**துணையானேன்**
**கொடுத்துவிடத்**
**துணிந்தனால்**
**கொண்டாடி மகிழ்கின்றார்**
**மடிகின்ற நிலையினும்**
**மண்செழிக்க உரமானேன்**

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நிலந்த ஜயவர்த்தன, மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே இருவரும் பதவியிலிருக்க விசாரிப்பதில் பயனில்லை

## கிரியெல்ல எம்.பி. சுட்டிக்காட்டு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 ஊடகம் வெளியிட்டுள்ள காணொளி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ. இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவை முழுமையாக நிராகரிப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சனல்-4 ஊடகம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள காணொளி சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமை யில் ஓய்வுபெற்ற விமானப்படைத்தளபதிஜயலத்வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர் சோசா ஆகியோர் தலைமையிலான மூவரங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 வெளியிட்டுள்ள காணொளி உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில், கருத்து வெளியிடும்போதே அக்கட்சியின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏற்கனவே நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கு அடுத்தபடியாக, ஜனாதி பதி விசாரணை ஆணைக் குழு ஸ்தாபிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

இவற்றை விடவும், பொலிஸார், படையினர் உள்ளிட்டவர்களும் சில விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆனால், இதுவரையில் உண்மைகள் முழுமையாகக் கண்டறியப்படவில்லை.

குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தற்போது மீண்டும் ஒரு தடவை விசாரணைகளை முன் னெடுப்பதற்காக ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த விசாரணைக்குழுவை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். குறித்தகுழு, காலத்தை இழுத்தடிக்கச் செய்வதற்கான ஜனாதிபதியின் நோக்கத்தையே நடைமுறைப்படுத்தும் என்றே கருதுகின்றோம். ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதே பொருத்தமானதாகும்.

மேலும், விசாரணைக் குழுக்களை அமைப்பதற்கு முன்னதாக தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள அதிகாரிகளான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன, அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சாலே ஆகியோரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே ஜனாதிபதியும், அரசாங்கமும் உண்மைகளைக் கண்டறிவதற்கான இதயசுத்தியுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். - என்றார். (05)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து

# சர்வதேச விசாரணை கோருவது அரசியல் இலாப நோக்கிலேயே

## ஈ.பி.டி.பி. ரங்கன் சாடல்

அரசியல் இலாபத்தை இலக்காகக் கொண்டே ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை பல்வேறு தரப்பினரும் கோருகின்றனர் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்; 1983 ஜூலை கலவரம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர் ஆட்சியில் இடம்பெற்றபோது அன்று ஜே.ஆர். குற்றவாளியாக வர்ணிக்கப்பட்டார்.

அதன்பின்னர் பிரேமதாஸ ஆட்சியில் நடந்த அநீதிகளுக்கு பிரேமதாஸ குற்றவாளியாக வர்ணிக்கப்பட்டார்.

வடக்கில் நடந்த சூரியக்கதிர் நடவடிக்கை அழிவுகளுக்கு அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குற்றவாளியாக வர்ணிக்கப்பட்டார்.

அதன்பின்னர் மாவிலாறு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான அழிவகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ குற்றவாளிகாக வர்ணிக்கப்பட்டார். - என்றார். (05)




# தலை துண்டிக்கப்பட்ட பெண்ணின் சடலம் மீட்பு

மத்துரட்ட ஹேவாஹெட்ட பிரதேசத்தில் 70 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மதுரட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலத்தின் தலைப்பகுதி உடலிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் கடந்த 6 ஆம் திகதி முதல் காணாமல்போனதாக அவரது மகன் ஹகுராங்கெத்த பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.(05)

# ஓசோன் படை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் சிறப்பு நிகழ்சிகள் முன்னெடுப்பு

ஓசோன் படை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு யாழ் சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் நேற்று (திங்கட்கிழமை) பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் வலிகாமம் கல்வி வலய சுற்றாடல் முன்னோடி வலய ஆணையாளர் ப.அருந்தவம், எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகத் தலைவர் மற்றும் செயலாளர்களாகிய லி.கேதீஸ்வரன், ம.சசிகரன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச ஓசோன் படை பாதுகாப்பு தினம் வருடம்தோரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# புத்தளம் கலாஓயா பாலத்தில் 7 அடி நீள முதலை சஞ்சாரம்



புத்தளம் எலுவாங்குளம் கலா ஓயா பாலத்தில் முதலைகள் சஞ்சரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அப்பகுதியில் குளிப்பதற்கு வருகை தரும் பொதுமக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு எலுவாங்குளம் வனவிலங்குதிணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் குறித்த பாலத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் சுமார் 7 அரை அடி நீளமுடைய முதலையொன்று சஞ்சரித்தைக் காணக்கூடியதாக இருந்தது. (05)

# கஜேந்திரன் தாக்கப்பட்டமை மிகுந்த கவலை அளிக்கின்றது

## ரிஷாத் எம்.பி. தெரிவிப்பு

தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீதான தாக்குதலின் போது கஜேந்திரன் எம்.பி தாக்கப்பட்ட சம்பவம் கவலையளிப்பதாக மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டஅறிக்கையில் -

சிறுபான்மைச்சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகின்றது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்? பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாகின்றமை அல்லது அவமானப்படுத்தப்படுகின்றமை நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம்பெறுகின்றமை சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்?. - இவ்வாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (05)

## பயங்கரவாத....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமன்றி தவறான விளக்கங்களை பரப்புரை செய்து எதிர்ப்புக்களை வளர்க்க வேண்டாம் என்று எதிர்க்கட்சியிடம் கோருகின்றோம் – என்றார்.

## வீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல நெடுஞ்சாலைத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்க முடியாதநிலைஏற்பட்டிருந்தது. சுமார் 180 பில்லியன் ரூபா ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

அவ்வாறு வழங்க வேண்டியிருந்ததொகையில் தற்போது சுமார் 151 பில்லியன் ரூபா குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 29 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை வழங்கப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் மீண்டும்நெடுஞ்சாலைத்திட்டப் பணிகளை தொடங்கியள்ளனர். கடந்த காலங்களில் செலுத்த முடியாமல் இருந்த பெரும் நிலுவைத் தொகை தற்போதுவழங்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு, வீதி அபிவிருத்திப் பணிகள்குறித்துமுன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏ மற்றும் பி தர வீதிகள், அபிவிருத்தி அதிகார சபையால் பராமரிக்கப்படுகின்றன. இந்த நாட்டில் வருடாந்தம் 12,225 கிலோ மீற்றர் நெடுஞ்சாலைகள் மற்றும் 312 கிலோ மீற்றர் அதிவேகப் பாதைகள், 5432 பாலங்கள், 12 மேம்பாலங்கள் போன்றவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை பராமரித்து வருகின்றது.

மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், கல்வி, மற்றும் சுகாதாரப் பணிகளை சிறப்பாக செயற்படுத்தவும் ஒரு நாட்டின் வீதிக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. இன்று அனைவரும் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்துகிறார்கள்.

அந்த வகையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்துக்கு வசதிகள் சிறந்த முறையில் அமைய வேண்டும். எனவே வீதிக்கட்டமைப்பு ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாக உள்ளது.

எமது நாட்டின் வீதிக் கட்டமைப்பு நன்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் வீதிகளை விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும். வீதி அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைப்பது குறைவு. சிறிய பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளை பராமரிக்க ஆண்டுதோறும் ஏராளமான பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

அதிவேகப்பாதைகள் ஒரு நாட்டுக்கு அவசியம். எமது நாட்டில் ஏற்பட்ட டொலர் பிரச்சினை மத்திய அதிவேக நெடுஞ்சாலையின்நிர்மாணப் பணிகளைப் பாதித்தது. மீரிகம, குருநாகல் அதிவேகப் பாதையின் பணிகள் நிறைவடைந்துள்ளன. பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான 31கிலோமீற்றர் கொண்ட அதிவேகப்பாதையின் முதல் 13 கிலோ மீற்றருக்கான பணிகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன.

2019இல்ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நுழைவாயில் வழியிலான வீதி நாட்டிற்கு மிகவும் முக்கியமானது. ஆசியஅபிவிருத்திவங்கியின் கடனுதவியின்கீழ்இப்பணிகள் முன்னெடுக்கப்படுகிறது. புதிய களனிப் பாலத்தில் இருந்துகாலிமுகத்திடல்வரையான தூண்களுக்கு மேல் செல்லும் விசேட வீதியின் மூலம் கொழும்பு கோட்டை மற்றும் துறைமுகம் போன்ற பரபரப்பான பகுதிகளில் தற்போது நிலவக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும். இப்பாதையை 2024ஆம் ஆண்டில் மக்கள் பாவனைக்குக் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கொஹுவல மேம்பாலத்தின் 85% பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும்ஹங்கேரிய நாட்டின் கடனுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்டுவரும்பேராதனை மேம்பாலத்தின் 3சிபணிகள் நிறைவடைந்துள்ளன.

ஒரு இலட்சம் வீதிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 13,160 வீதிகள் அமைக்கும் பணிஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வீதிகள் 17,850. கிலோமீற்றர்களாகும். அதில், 5201 வீதிகள் அதாவது 6300 கி.மீ. வீதிகளின்பணிகள்ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த மொத்தத் திட்டமான 17,850 கிலோமீற்றர் வீதிகளை அமைப்பதற்கு அரசாங்கம் 231 பில்லியன் ரூபாவை மதிப்பிட்டுள்ளது. தற்போது பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்காக 160 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 70 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள நாட்டின் வீதி அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னுரிமைவழங்கஆளும் தரப்பு தீர்மானித்துள்ளது. அந்த வகையில் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் நெடுஞ்சாலைகளை பராமரிக்கவும், இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்கவும்பணம்ஒதுக்கத்திட்டமிடப்பட்டுள்ளதால், குறித்த பணிகளை விரைவில் நிறைவுசெய்யமுடியும்என்று எதிர்பார்க்கப்படுகிறது – என்றார்.

# மோடியைச் சந்திக்கும் விக்கியினது யோசனைக்கு ஆதரவு கிட்டவில்லை

(ந. லோகதயாளன்.))

இந்தியப் பிரதமர் மோடியுடன் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாகச் சென்று பேசவேண்டும் என அண்மையில் தான் முன்வைத்த யோசனைக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லையெனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தான் விடுத்த அழைப்புத் தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமர் மோடியை தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து டெல்லியில் சந்திப்பதற்கு அனுமதி கேட்டால் என்ன என்ற ஒரு கேள்வி என்னிடம் கேட்கப்பட்டதன் அடிப்படையில்தான் நான் மின்னஞ் சல் மூலமாகஎங்களுடையகட்சித்தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பினேன்.

மூன்று நாட்களுக்குள் அவர்களிடம் இருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும் எனது மின்னஞ்சலில் கூறியிருந் தேன். அதனை சுரேஸ் பிரேமச் சந்திரன் மட்டுமே வரவேற்றுப் பதிலளித்திருந்தார். டெல்லியில் சென்று இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் மட்டுமே கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தனது பதிலில் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் எனது அழைப்புக் குறித்து மற்றவர்களிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனிடம் இருந்தும் எந்தப் பதிலும் வரவில்லை. இது தொடர்பில் என்னுடன் பேசுவார் என்ற மாவை கூறியிருந்தார் என்று அறிந்தேன். ஆனால் என்னுடன் அவர் பேசவில்லை. சித்தார்ந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடைய கருத்துக்கள் என்ன என்பது தெரியவில்லை. தமிழ்த்தேசியக்கட்சித்தலைவர்சிறிகாந்தாவும் இது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

இதற்கிடையில் கஜேந்திரகுமாரை இவற்றில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என ஒருவர் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். எங்களுடைய கருத்துகளுக்கு மாறாக கருத்துக்களை தெரிவிப்பவர்களை துரோகி என்று சொல்வதை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி தேவை என்று இந்தி யாவிற்குச் சென்று நாங்கள் பேசுவதில் பயனில்லை. ஆனால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறுவதற்கு அவர்களுக்கு உரித்துண்டு. எனவே நாம் இந்தியா சென்று 13 குறித்துப் பேசுவதே பொருத்தமாக இருக்கும்.

13ஆம் திருத்தச்சட்டம் குறித்து ஒன்று சேர்ந்து இந்தியாவிடம் கோருவது நன்மை தரும் என்று ஒரு பத்திரிகையும் கூறியுள்ளது.

ரணில் எதுவும் தரமாட்டார் என்று நாங்கள் கூறியிருந்தோம் ஆகவேதான் இந்தியாவிற்கு பின்னால் ஓடுகின்றீர்கள் என விமர்சிக்கின்றனர். தான் கியூபா, அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக ரணில் தெரிவித்திருக்கிறார். சொன்னபடி நடப்பாரா என்பதை உறுதிப்படுத்த முடியாது.

எந்தவொரு சிங்கள அரசியல் வாதிகளும் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பிரித்து கொடுக்கத் தயாராக இல்லை. அடுத்த தேர்தலில்தங்களுக்குவாக்குகள்கிடைக்காமல் போய்விடும் என்று நினைக்கின்றார்கள்.

சில சிங்கள சக்திகள் மாவட்டச் செயலர், கிராமசேவகர்கள் போன்ற பதவிகளை திரும்பவும் மாகாண சபைகளுக்குக் கொடுக்காதீர்கள் என்று ரணிலுக்கு உபதேசம் செய்துள்ளனர். அவ்வாறு செய்தீர்களானால் தமிழர் மீது எங்களுக்கு கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும் என்று பேசியுள்ளனர்.

இத்தகைய பின்னணியில் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குஇந்தியாவினுடைய அனுசரணையும் அவர்களுடைய நெருங்குதல்களும் தேவை என்று நாங்கள் எதிர்பார்க் கின்றோம். இதன் காரணமாக நாங்கள் இந்தியா சென்று பிரதமர் மோடியுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம் என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# இறந்தவர்களை வழிபடவும் தடைதானா?

# கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதலை கண்டித்துத் தேவிபுரத்தில் போராட்டம்








ந.லோகதயாளன்.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் மீதும் திருகோணமலையில்மேற்கொண்டதாக்குதலைக் கண்டித்தும் முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல்குழுவின்ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் முதன்மை வீதியில் ஒன்று கூடி கையில் பதாதைகளை தாங்கியவாறு, மக்கள் எதிர்ப்பு கோங்களை வெளிப்படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தைநேற்று முன்னெடுத்திருந்தார்கள். தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தியது மாத்திரமல்ல நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும் சர்வதேச விசாரணை வேண்டுமென வலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

திருகோணமலை தமிழரின் தலைநகர், தியாகி திலீபன் அகிம்சையின் அடையாளம், தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் இறந்தவர்களைகூட வழிபடத் தடைதானா? , போராடுவோம் போராடுவோம்! தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவோம், ஐ.நா சபையே? தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? வடக்கு கிழக்கு தமிழரின் தாயக பூமி நிறுத்து நிறுத்து! அடாவடியை நிறுத்து போன்ற பல்வேறு வாசகங்களையுடையபதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## யாழ்ப்பாண மாவட்ட வைத்தியசாலைகளில் இரண்டு நாள்கள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் இரண்டு நாள்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நாளை வியாழக்கிழமையும் இந்தகவனவீர்ப்புப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின்யாழ். மாவட்ட இணைப்பாளர் வி.தர்சன் அறிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு, வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை சுகாதார கட்டமைப்பை பாதிக்கும் என்றும் அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அதனைத் தடுக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரியே இரு தினங்கள் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

## நோயால் பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு உதவிகள்

கிளிநொச்சியில் நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கனடாவில் வசித்து-வரும் செந்தில்குமரன் என்பவரின் நிதி பங்களிப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

அந்தவகையில், நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறிதரன்தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) 8 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கனடாவில் இருக்கும் பாடகரான செந்தில் குமரன் 'நிவாரணம்' எனும் பெயரில் இசை நிகழ்ச்சிகளை தனது சொந்த செலவில் நடத்தி அதன் ஊடாகப் பணத்தைத் திரட்டியே குறித்த வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றார்.

அத்துடன்இவர்கடந்தகாலங்களில் 105 இதய சத்திர சிகிச்சைகளுக்கு நிதிதிரட்டி உதவி வழங்கியுள்ளார் என்பதும் முல்லைத்தீவு, மல்லாவி வைத்தியசாலைகளுக்கு இரத்த மாற்று சுத்திகரிப்பு நிலையத்தை அமைத் துக் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## திலீபனின் ஊர்திக்குத் தடை கோரிய பொலிஸார் நிராகரித்து வவுனியா நீதிமன்று அதிரடி உத்தரவு



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார்கோரிய தடை உத்தரவை நிராகரித்து வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் குறித்த ஊர்தி செல்லும் போது, பொதுமக்களுக்கு இடையூறு மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்தாத வகையில் பொலிஸ் பாதுகாப்பைவழங்குமாறுஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்தஊர்திப்பவனிவவுனியாவிற்கு வந்தால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை கவனத்தில் எடுத்த நீதிமன்றம், இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தது. அத்தோடு இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.(05)

## கல்முனை சமுர்த்தி வங்கிக்கு நிரந்தரக் காணி கையளிப்பு!



கல்முனை பிரதேசத்தின் நற்பிட்டி முனை சமுர்த்தி வங்கிக்கான நிரந்தர காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம் ஹரீஸ் கலந்து கொண்டிருந்தமையுடன் பிரதேசசெயலக கணக்காளர் கே.எம்.ஏ அமீர் அலி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பயணப் பையில் இடப்பட்டு சீதுவையில் வீசப்பட்ட சடலம்; தொழில் தருவதாக மோசடி செய்தவருடையது என தகவல்

சீதுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிதிகொட பிரதேசத்தில் தடுகம் ஓயா கரையில் நீலநிற பயணப் பையொன்றில் இடப்பட்டு வீசப்பட்டிருந்த நிலையில் அண்மையில்மீட்கப்பட்டஆண்ஒருவரின் சிதைந்த சடலம் தொடர்பான விஜூரணையின்போது சீதுவை பொலிஸாருக்குமேலும்தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில், சடலமாக கிடந்தவர் மாரவில பிரதேசத்தில் வசிக்கும் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் முகவர் எனத் தெரிய வந்துள்ளது. குறித்த நபர் பலரை வெளி நாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களிடமிருந்து பணத்தை மோசடி செய்தவர் என விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாக சீதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பலரையும் ஏமாற்றியதால் அவர்களுக்குபயந்துவசிப்பிடத்தை விட்டுத்தப்பிச்சென்றவர்எனதகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

## பகிடிவதைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க குழு

### சுரேன் ராகவன் தெரிவிப்பு




பகிடிவதைக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்பதற்குவிசேட குழுவொன்றுநிறுவப்பட்டுள்ளதாக உயர்கல்விஇராஜாங்கஅமைச்சர் சுரேன்ராகவன்தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில் –

பல்கலைக்கழகங்களின் இடம்பெறும்பகிடிவதைகள்தொடர்பாக பல்வேறுஆய்வுகள்கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த கலாசாரத்தை நாம் நிறுத்தியே ஆகவேண்டும். பல்கலைக்கழகங்களில் இருக்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களாலேயேஇந்தபகிடிவதை அரங்கேற்றப்படுகிறது.

இதனால் மாணவர்கள் உடல்-உள ரீதியான கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்.

கடந்த 12 மாதங்களில் மட்டும் 17 பல்கலைக்கழகங்களில் 36 பகிடிவதைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

57 பேருக்கு வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. சுயாதீன விசாரணைக்குப் பின்னரே இவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வகுப்புத்தடை செய்யப்பட்ட மாணவர்கள், தங்களின் குற்றங்களுக்குமன்னிப்புக்கோரினால் அவர்களுக்கான தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## தேர்தலுக்காக இனவாதத்தை பரப்புவதற்கு ஒரு கூட்டம் தயாராகி வருவதாக விசனம்

### வினோ நோகராதலிங்கம் தெரிவிப்பு

அஹிம்சை வழியில் போராடி உயிர்த்தியாகம் செய்த தியாகிக்கு ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சலி செலுத்தும் வேளையில் தாக்கப்பட்ட சம்பவம் இந்த நாடு இன, மத சிந்தனைக்குள்ளிருந்து மீளப்போவதில்லை என்பதை உணர்த்துகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் வினோநோகராதலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார். திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சம்பவத்தை கண்டித்து அவர் வெளியிட்டுள்ளஅறிக்கையிலேயே இந்தவிடயத்தைதெரிவித்துள்ளார்.

தேர்தலுக்காக இனவாதத்தை பரப்புவதற்கு ஒரு கூட்டம் தயாராகி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ளார். இந்தநிலையில், மக்கள்மிகவும்அவதானமாகவும் விவேகத்துடன்செயற்படவேண்டும் எனவும் திட்டமிட்டு தாக்குதல் மேற்கொண்டவர்கள் கைது செய்யப்பட்டுசட்டத்தின்முன்நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

## புதிய அதிபர் நியமனத்திற்கு எதிராக பொது மக்கள் நேற்றுப் போராட்டம்

### மன்னார், தாராபுரம் பாடசாலையில்





தாரபுரம், அல்மினா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்களால் அப்பாடசாலைக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) ஆர்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்' குறித்த பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெறுபேறுகள் தொடர்சியாக சரிவு நிலையில் காணப்படுவதாகவும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் தங்களது பதவி காலம் நிறைவடைந்தும் பாடசாலையின் நிர்வாகத்தில் தலையீடு செய்வதாகவும்' குற்றம் சுமத்தினர்.

அதேநேரம்அதிபர்தகுதியைப் பூர்த்தி செய்து நேர்முக தேர்வில் கலந்து கொண்ட தாராபுரம் கிராமத்தை சேர்ந்த அதிபரை நியமிக்குமாறும் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் தாங்கள் எழுத்து மூல மகஜர் ஒன்றை உயர் அதிகாரிகளுக்கு கையளித்தனர் எனவும் குறித்த மகஜர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தனர். (05)

## பல விட்டுக்கொடுப்புக்களை அமைச்சர் ஜீவன் செய்கிறார்

### மருதபாண்டி ராமேஷ்வரன் பெருமிதம்



மலையக அரசியல் கலாசாரம் மாற வேண்டும் என்ற உயரிய பண்புடனேயேஎமதுபொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் செயற்பட்டு வருகின்றார். அதற்காக அவர் பல விட்டுக்கொடுப்புகளை செய்து வருகின்றார்' என்று இலங்கை தொழிலாளர்காங்கிரஸின்தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஆலயங்களுக்கான ஒலி பெருக்கி, மின்பிறபாக்கி மற்றும் கலசங்கள் என்பன வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சர் ஜீவன் தொண்டமான் பல விட்டுக்கொடுப்புகளைச் செய்து-வருவதால்இதனைஎமதுபலவீனமாகக் கருத வேண்டாம், மக்களுக்காகவே அதனையும்செய்கின்றோம்.ஏனெனில் எமது மலையக இளைஞர்களும் இன்றுமாற்றத்தைஎதிர்பார்க்கின்றனர்.

ஆன்மீக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற முக்கிய -சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற இடங்களில் ஒருபோதும் அரசியல்நடத்தக்கூடாது. அவ்வாறான இடங்களில் இணைந்து செயற்பட்டு சிறந்த முன்னுதாரணத்தை சமூகத்துக்கு – அடுத்த தலைமுறைக்கு வழங்குவதற்கு அரசியல் தரப்புகள் முன்வர வேண்டும். – இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதான தாக்குதல் பொலிஸ்மா அதிபர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரன் மீதுதாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் உடனடியாக நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன்வேண்டுகோள் விடுத்துள்ளார். ருவிட்டர் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரன் மீது பொலிஸாரின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலைக் கடுமையாகக்கண்டிப்பதாகத்தெரிவித்துள்ள அவர்,தாக்குதலைமேற்கொண்டவர்களை இலகுவாக அடையாளம் காணமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் உடனடியாக நடவடிக்கைஎடுக்கவேண்டும்என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2023இல் வெளியிடப்பெற்றது.